அன்பார்ந்த பெற்றவர்/பாதுகாவலர் அறிவது,

பாடசாலைப் பிள்ளைகளின் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் தமது பிள்ளைகளுக்கான பாடசாலைக் கட்டணங்களை நடைமுறைக் குறிப்பேடுகள், வருடாந்த நூல்கள் மற்றும் வகுப்புப் பிரயாணங்கள் போன்ற விடயங்களுக்காக செலுத்த முற்படும்பொழுது, இலகுவான ஒரு முறையில் பாதுகாப்பான, சௌகரியமான ஒரு வழியில் அதற்குரிய பணம் கட்டுவதற்காக ஸ்கூல் காஷ் ஓன்லைன்(School Cash Online) என்ற ஓர் இணையத் தளத்தினை ரொறொன்ரோ மாவட்டப் பாடசாலைச் சபை ஆரம்பித்து வைத்துள்ளது. இந்த ஸ்கூல் காஷ் ஓன்லைன் இணையத்தள உபயோக ஏற்பாட்டினை எங்கள் பாடசாலைச் சமூகத்தினர் [insert date] திகதியன்று ஆரம்பிக்கும் வாரம் தொடக்கம் பயன்படுத்த முடியும்

உங்கள் பிள்ளைக்குப் பொருந்துகின்ற பாடசாலைக் கட்டணங்கள் யாவும் இந்த ஸ்கூல் காஷ் ஓன்லைன் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டு இருக்கும். இங்கு நீங்கள் உங்களைப் பதிவு செய்த பின்பு ஒரு டெபிற் அல்லது கிறெடிற் கார்ட் (debit or credit card) வங்கி அட்டையைக் கொண்டு நீங்கள் உங்களுக்கு வேண்டிய பொருட்களை அல்லது நிகழ்வுகளுக்கான அனுமதியை வாங்கிக் கொள்ள முடியும். பாடசாலையில் விலை கொடுத்து வாங்கக் கூடிய ஒரு புதிய அம்சம் வெளிவரும் பொழுது அதனை நீங்கள் இந்த இணையத் தளத்தில் பார்க்கக் கூடியதாக இருக்கும். கட்டணம் தேவைப்படும் ஒரு புதிய நிகழ்வு பாடசாலையில் உங்கள் பிள்ளைக்கென ஏற்பாடு செய்யப்படும் பொழுது அது பற்றி உங்களுக்கு விசேட அறிவித்தல் கிடைக்கும் எற்பாட்டினையும் நீங்கள் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

**இந்த இணையத் தளத்துக்கான பதிவுமுறை [insert date] திகதியன்று ஆரம்பிக்கும் வாரம் தொடக்கம் நடைமுறைக்கு வரும்.** ஸ்கூல் காஷ் ஓன்லைன் இணையத் தளத்தில் உங்களைப் பதிவு செய்வதற்குத் தயவு செய்து https://tdsb.schoolcashonline.com என்ற இணையத்தளம் சென்று “Get Started Today” (இன்றே ஆரம்பியுங்கள்) என்பதைத் தெரிவு செய்து அங்கு விபரிக்கப்படும் 3 பதிவுப் படிமுறைகளைப் பூரணமாக்குங்கள். இப்பதிவு முறை பற்றி மேலதிக தகவலினைப் பெறுவதற்கு இக்கடிதத்தடன் அனுப்பப்பட்டு உள்ள கைப்பிரசுரத்தைப் படித்துப் பாருங்கள். உங்கள் பதிவு முடிந்த பின்பு கணினி வழியாக உங்களுக்கு மின்னஞ்சல் அறிவிப்பு ஒன்று அனுப்பி வைக்கப்படும். அதில் நீங்கள் இந்த இணையத் தளத்தின் தகவலை எப்பொழுது தொடக்கம் பார்வையிடலாம் என்று குறிப்பிடப்பட்டு இருக்கும்.

பதிவு முறை அல்லது ஸ்கூல் காஷ் ஓன்லைன் செயல்முறை பற்றி உங்களிடம் கேள்விகள் உண்டென்றால், தயவுசெய்து ஸ்கூல் காஷ் ஓன்லைன் இணையத்தளப் பக்கத்தின் மேற்புறத்தில் உள்ள “Get Help” (உதவி பெறுங்கள்) என்ற தெரிவினை தெரிவு செய்யுங்கள். அத்துடன் நீங்கள் ஸ்கூல் காஷ் ஓன்லைன் பெற்றோர் உதவிப் பணிப்பீடம் (Help Desk) என்பதுடன் 1-866-961-1803 தொலைபேசி இலக்கத்தில் அல்லது

parenthelp@schoolcashonline.com என்ற மின்னஞ்சல் முகவரி வழியாகவும் தொடர்பு கொள்ள முடியும். பதிவு செய்யும் நடைமுறை, அனுமதிக் குறியீடு(password) மீளப்பெறுதல், உங்கள் பெயரில் உள்ள கணக்கினை அணுகுதல் அல்லது பணக் கொடுப்பனவுப் பிரச்சினைகள் ஆகியவற்றில் பெற்றோர்/பாதுகாவலர்களுக்கு உதவுவதற்காக பெற்றோர் உதவிப் பணிப்பீடம் உள்ளது.

நேர்மையுடன்,

[Principal's name]